## ஆசிரியரிடமிருந்து



இன முரண்பாடுகளின் விளைவால் இலங்கையில் பல தாக்கங்களும் விளைவுகளும் காணப்படுகின்றனவே. ஏராளமான உயிரிழப்புகள், சொத்தழிவுகள் மற்றும் எதிர்காலத்தை நிர்ணயிக்க முடியாத எத்தனையோ சூழ்நிலைகள் மத்தியிலும் வானத்தையும், பூமியையும் படைத்த கடவுள் (கர்த்தர்) தமது உன்னத வழியை நோக்கி வருமாறு அறைகூவல் விடுத்து வருகின்றார். கதவு தட்டப்படும் சத்தம் எல்லா வேளையிலும் உணரப்படுவதில்லை.

1999 பெப்ருவரியில் அதை நான் உணர்ந்து கொண்டேன். கர்த்தராகிய இயேசு என்னுடைய இதயக் கதவினை தட்டிக் கொண்டேயிருப்பதை உணர்ந்தேன். உடனேயே என்னை அவருக்கு முழுமையாக ஒப்புக்கொடுத்தேன். 1999 (அக்டோபர் 7) சென்னையில் கைது செய்யப்பட்டு, கொழும்பு கொண்டுவரப்பட்டு, 2003 நவம்பர் வரை பல்வேறு தடுப்புகாவலில் வைக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டேன்.

2004மார்ச் மாதம் சுவிஸ் அரசு வீசா தந்து எனக்கு தயவு காண்பித்தது.

கர்த்தராகிய இயேசுவின் அழைப்பின் பேரில் இயேசுவின் நித்திய விவாக ஊழியங்களை 2013 இலிருந்து ஆரம்பிக்கின்றேன். இதில் ஒரு அம்சம் தான் “உண்மையா?” என்ற எனது சாட்சியங்கள் அடங்கிய இதழ் ஆகும். இது இதயக் கதவினை தட்டும் இயேசுவை மனிதகுலத்திற்கு உணர்த்தும் என்பதே எனது நம்பிக்கை ஆகும். அதுமட்டுமல்லாமல் விசுவாசத்தில் வளர விரும்புகிறவர்களுக்கும் இது ஊக்கமளிக்க வல்லது.

இவ்விதழில் எனது இரட்சிப்பின் சாட்சியங்களுடன் ஆவிக்குரிய பாதையில் நடத்தக்கூடிய கட்டுரைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

Jesus Eternal Holylife Mission என்ற இந்த ஊழியங்களை சுருக்கி Jeh Mission (ஜெ–மிஷன்) என அடையாளப் படுத்த விரும்புகின்றேன்.

ஜெ–மிஷன் ஆரம்பித்த உடனேயே பலர்மோ இத்தாலியில் மூன்று நாட்கள் சுவிசேஷ கூட்டம் நடாத்த அழைப்பு வந்தது. அவை ஆசீர்வாதமாக இருந்தன.

இன்னும் தேவ சபைகளில் வார்த்தைகளை கொடுக்கவும் எனது சாட்சிகளை பகிரவும் கர்த்தர் எனக்கு கிருபை செய்து வருகின்றார்.

இவ்விதழை சுவிசேஷ பாரமுள்ளவர்கள் மற்றவர்களுக்கு கொடுத்து சத்தியத்தின் வழியில் நடந்திட எம்மோடு கரம்பிடிக்குமாறு அன்போடு வேண்டுகின்றேன்.

நன்றி.



கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**அன்புடன் இயேசுவுக்குள்**
**சகோ.எறிக் எஸ்.யேசுதாஸன்**

# Pilatus



சுவிற்ஸர்லாந்துவின் இதயபூமியாகிய லுசேர்ன் பட்டணத்தில் மிக அதிகமான சுற்றுலாப்பயணிகள் எப்போதுமே சுற்றுலா மேற்கொண்டு வருகின்றனர். சுவிஸ் நாடு உருவான அடிப்படை மத்திய பூமியாக இது விளங்குகின்றது. மக்களில் ஒரு தலைவன் தான் ஆதிமுதல் ஆண்டுவருவான். அநேகமாக எல்லா விடயத்திற்குமே மக்களிடம் தேர்தல் நடைபெறும். மன்னர் ஆட்சி இல்லாமல் காணப்பட்டது. இப்படி மக்கள் ஆட்சியின் காலத்தில் பல மக்கள் அவை (Gemeinde) சேர்ந்து முதலில் சுவிஸ் நாடு உருவானது. அருகிலிருந்த இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மன், ஒஸ்திரியா போன்ற நாடுகளின் எல்லையைச் சேர்ந்தவர்களும் இந்த ஆட்சி முறையை விரும்பியதால் தாங்களும் மக்கள் தலைவனைத் தெரிந்து கொண்டு இந்த மக்களவையில் இணைந்து கொண்டனர். இதனால் சுவிஸ் நாட்டின் எல்லை விஸ்தரிக்கப்பட்டது. ஓகஸ்ட் 1ம் (1291) நாளில் சுவிஸ் உருவானதாக விழா கொண்டாடி வருகின்றனர்.

இதயபூமியாகிய லுசர்ன் பட்டணத்தின் தென்பகுதியில் Pilatus எனும் மலை காணப்படுகின்றது. தினமும் ஏராளமான சுற்றுலா பிரயாணிகள் காலநிலையைப் பொருட்படுத்தாமல் சென்று வருகின்றனர்.

Pilatus என்ற பெயர் எப்படி வந்தது? யார் இந்த Pilatus? ஏறக்குறைய 2000 வருடங்களின் முன்னர் யூதர்களினால் சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்பட்ட கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை சிலுவைச் சாவுக்கு கையெழுத்திட்டு ஒப்புக்கொடுத்த அதிகாரி தான் போஞ்சியோ பிலாத்து (Pontius Pilate). இயேசுவின் காலப்பகுதியில் ரோமர் எருசலேமை ஆட்சிக்குட்படுத்தியிருந்தனர். இந்தப்பகுதியில் தேசாதிபதி (ஆளுநர்) ஆக இருந்த அதிகாரிதான் இந்த Pilatus.

தனது பதவிக்கு ஆபத்து வராமலிருக்கும்படி யூதரின் சத்தத்துக்கு பயந்து இயேசுவை சிலுவைச் சாவுக்கு ஒப்புக்கொடுத்தான்.

இயேசுவின் சிலுவைச் சாவுக்குப் பின் பிலாத்து சுவிஸ்நாட்டில் அமைதி தேடி வந்தான். மன உளைச்சலுக்கு ஆளான பிலாத்து ஒரு பைத்தியக்காரனைப் போல அலைந்து திரிந்தான். அவனது மரணத்தின் பின் அவனது சரீரத்தை மண்ணுக்குள் அடக்கம் பண்ணினார்கள். ஆனால் அவனுடைய சரீரம் மறுநாள் வெளியே கிடந்தது. பின்னர் ஏரியில் எறிந்து விட்டனர். மறுநாள் கரையில் ஒதுங்கிக் கிடந்தது. எனவே தான் ஒரு குன்றின் உச்சியில் காணப்படும் சதுப்பு நிலத்தில் கொண்டு சென்று அது புதைந்து போகும் வண்ணம் அவனது சரீரத்தை வீசி எறிந்து விட்டனர்.

இந்த குன்றின் மேல் இவனது சடலம் வீசப்பட்ட பின்னர் பலர் மர்மமான முறையில் மரித்தார்கள். பொல்லாத அசுத்த ஆவியின் நடவடிக்கைகள் என்று பலரும் நம்பினார்கள். இறுதியில் இந்த அழகான குன்றிற்கு Pilatus என்று பெயரிட்டு, பல ஆண்டுகளாக Pilatus குன்றிற்கு செல்ல மக்கள் தலைவர்களால் தடைவிதிக்கப்பட்டது.




மகாராணி (Queen) விக்டோரியா 1868இல் ஒரு சுற்றுப்பயணம் Pilatus மலையின் மேல் மேற்கொண்டார். இதன்பின்பு தான் இக்குன்றின் பிலாத்து அடக்கம் செய்யப்பட்ட சதுப்பு நிலத்தை தவிர்த்து, ஏனைய பகுதிகளுக்கு சுற்றுலா செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



இன்றும் ஒரு அசாதாரணமான சுழல் காற்று அந்த சதுப்பு நிலத்தின் மேல் வீசிக்கொண்டுதான் இருக்கிறது. இப்பகுதி இன்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

நீங்களும் Pilatus மலைக்கு சுற்றுலா செய்யலாம். தனி நபருக்கு 80 சுவிஸ்பிராங்குகளும் 16 வயதுக்குட்பட்டவர்களுக்கு 40 சுவிஸ் பிராங்குகளுமே (Round Trip).

Alpnachstad என்ற பகுதியிலிருந்து பற்சில்லு முறையில் இயங்கும் மின்சார ரயிலில் 48%மான சரிவுப் பாங்காக பயணித்து Pilatus உச்சியை அடையலாம். உலகத்தினால் மிகவும் வியந்து பார்க்கப்படும் பிரயாணமாக இது விளங்குகிறது.

குன்றின் உச்சியில் இரண்டு ஹோட்டல்கள் காணப்படுகின்றன. இந்த குன்றின் மேலிருந்து மிகவும் அழகான காட்சியை பார்த்து ரசிக்கலாம். மலைகளின் நடுவே நான்காக பிரிந்து காணப்படும் ஆற்றுப்படுகையை காணலாம். என்னே அழகு! இதனை ரசிக்கவே பல தேசங்களிலிருந்து எண்ணற்ற சுற்றுலாப் பயணிகள் தினமும் வந்து குவிந்து கொண்டுள்ளனர்.



குன்றின் உச்சியிலிருந்து Cable Car மூலமாகவும் கீழ் நோக்கி இறங்கி வர முடியும்.

Luzern இனிலிருந்து கப்பலில் Alpnachstad இற்கு சென்று, மின்சார பற்சில்லு ரயிலின் மூலம் மேலே சென்று பின்பு Cable Car மூலம் Kriens எனுமிடத்திற்கு கீழே வந்து பின்பு 1ம் இலக்க Bus மூலம் Luzern வந்தடையலாம். இதுதான் Pilatus Round Trip.

இதுவொரு Super அனுபவமாக இருக்கும்.





– தொகுப்பு Sis.Regina Eric



# மரண வழியிலிருந்து....

**சென்னை, அக்டோபர் 07,1999**

எனது 28வது பிறந்த தினத்திற்கு முந்திய நாள். எனது நண்பர் குடும்பமும் அவர்கள் நண்பர்களும் எப்படியாவது எனது பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தனர். அன்றைய தினம் நான் ஒரு ஹோட்டலில் என்னுடைய நண்பன் ஒருவனுடைய குடும்பத்திற்கு உதவி செய்யும் நோக்கில் சென்னையில் தங்கியிருந்தேன்.

தேவ ஊழியக்காரன் Benny Hinn என்பவருடைய "அபிஷேகம்" எனும் ஆவிக்குரிய நூலினை வாசித்துக் கொண்டிருந்தேன். சுயத்திற்கு மரித்தல் எனும் தலைப்பிலுள்ளதை படித்துக் கொண்டிருந்தபோது என்னால் அதை செய்ய முடியாது என்று தீர்மானித்து அந்நூலினை சுழற்றி எறிந்தேன். பின்னர் TV பார்க்கும் படி Channel–ஐ திருப்பினேன். Home Alone II பார்த்து தனியாக விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தேன்.



மதியம் 2.00 மணி என் அறைக்கதவு தட்டப்பட்டது, திறந்த பொழுதோ 'Q' பிரிவு (சென்னை) பொலிசார் என்னை ஈழத்தமிழர் விடுதலையை ஆதரிப்பதாகவும் அரசியற் படுகொலை ஒன்றிலும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் கூறி கைது செய்தனர்.



மறுநாள் எனது பிறந்த தினம். காலை முழங்காலில் நின்று ஆண்டவரே... நான் சுயத்திற்கு மரிக்கிறேன். என்னை மன்னியும், விடுதலை செய்யும் என்று கதறி அழுது ஜெபித்தேன். ஆனாலும் என் சிறையிருப்பு தொடர்ந்தது. சென்னையிலிருந்து கொழும்புக்கு கைதியாக நாடுகடத்தப்பட்டு ஐந்து பிறந்த தினங்கள் வரையிலும் சிறையிலடைக்கப்பட்டிருந்தேன்.

**"கர்த்தருக்கு பிரியமானவனாக நான் மாற வேண்டும் என தெளிவாக உறுதியாக தீர்மானம் எடுத்துக் கொண்டேன்.**

நான் கைது செய்யப்படுவதற்கு சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னதாகத் தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிந்து இரட்சிக்கப்பட்டேன். எந்தவொரு சபையிலும் விசுவாசியாக நான் இருந்தது கிடையாது. ஆவிக்குரிய அனுபவம் என்றால் என்னவென்று தெரியாது. நான் Q பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்படும் போது நான் முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டவனாகவே இருந்தேன். நான் கர்த்தராகிய இயேசுவை அறிந்து இரட்சிக்கப்பட்ட பின்னர் எனது வாழ்வில் ஏராளமான மாற்றங்கள் உடனடியாகவே ஆரம்பித்திருந்தன. ஆயுதங்கள் மேலிருந்த நம்பிக்கைகள் முற்றிலும் இல்லாமல் போனது. குடிவெறி, புகைபிடித்தல், நண்பர்களுடன் கும்மாளம் போடுதல், சினிமா, பைத்தியம், காதல், உடையலங்காரம், பணஆசை, பெருந்தீனி போன்றவைகளிலிருந்த ஆர்வம் மெல்ல மெல்ல குறைந்து இல்லாமல் போனது.

இந்த மாற்றங்கள் உண்டான போது தான் நான் கொழும்பிலிருந்து எனது சகோதரியின் திருமணத்திற்காக சென்னை சென்றிருந்தேன். எனது மனமாற்றம் எனது குடும்பத்தவர்கள், நண்பர்கள், மற்றும் எனது முதலாளி ஆகியோரை என்னை நோக்கி திரும்ப வைத்தது.

ஆனாலும் என்னைக் கைது செய்த Q பிரிவு பொலிஸாரினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்கள் எனது மனமாற்றத்தை நம்ப தயாரில்லாமல் இருந்தார்கள். அவர்கள் ஹோட்டலில் என்னைக் கைது செய்த போது ஒரு பைபிள், தந்தை பெர்க்ஸ்மானின் பாடல் கேசட் மற்றும் அபிஷேகம் எனும் ஆவிக்குரிய நூல் இவைகளையே என்னிடமிருந்து மீட்டிருந்தனர்.

நான் என்னை ஒரு அப்பாவி என்று சொல்லவரவில்லை. ஆனால் நான் முற்றிலுமாய் மாறிவிட்டேன். இரட்சிக்கப்பட்டிருந்தேன்.

கொழும்பு பயங்கரவாத புலனாய்வுப் பணியக (TID) அதிகாரிகளினால் சென்னையிலிருந்து கொழும்பு கொண்டு வரப்பட்டேன்.

இலங்கையின் மிகச்சிறந்த சட்டத்தரணியாகிய அமரர் உயர்திரு.குமார்

பொன்னம்பலம் அவர்கள் எனது கைது மற்றும் நாடுகடத்தல் சம்பந்தமாக கண்டன அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். மூன்று மாதங்களின் பின்னர் அவர் துரதிஷ்டவசமாக படுகொலை செய்யப்பட்டார்.

இப்போது எனது விடுதலைக்காக குரல் கொடுக்க எந்த சட்டத்தரணிகளும் தயாரில்லை. எனக்காக வழக்காட எவரும் முன்வரவில்லை.

எந்தவொரு மனித சக்தியினாலும் எனது விடுதலை சாத்தியமற்றது என நான் மெல்ல மெல்ல உணரத் தொடங்கினேன்.

நான் எனது பாதுகாப்பான பிரயாணங்களுக்கு உதவியாக ஒரு பைபிள் வாங்கி வைத்திருப்போமென்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே கொழும்பிலுள்ள சத்திய வசனம் என்ற நிறுவனத்திற்கு சென்றேன். அங்கேயிருந்த பணியாளர் திரு.நீரியஸ் பெர்ணான்டோவுடன் என்னை ஒரு விசுவாசியாக விரும்புவதைப் போல அறிமுகமாக்கிக் கொண்டேன். அன்றே ஒரு பைபிள் மற்றும் நான்காவது பரிமாணம் என்கிற போல் ஜாங்கி சோ அவர்களின் நூல் ஆகியவற்றை வாங்கினேன். அப்போது YFC (Youth for Christ) ஐ பற்றி நீரியஸ் அவர்கள் அறிமுகப்படுத்தி அங்கே செல்லும்படி சொன்னார்.

பெப்ருவரி 1999 ஒரு சனிக்கிழமை பி.ப 6.00 மணியிருக்கும் நான் அங்கே YFC நடக்கும் இடத்திற்கு சென்றேன். அன்று திரு.நீரியஸ் அவர்கள் தேவ செய்தியளித்தார்.

ஆகான் எனும் கீழ்ப்படியாத மனுஷனால் (யோசுவா 7:24,25) கர்த்தர் அவனையும் அவன் குடும்பத்தையும் தண்டிக்கிறார் என்ற தேவ செய்தி என்னைத் தொட்டது. ஒருவன் மனந்திரும்பி வரும்படி கர்த்தர் சந்தர்ப்பங்களை கொடுக்கிறார். இல்லாத பட்சத்தில் குடும்பம், வம்சம் என தண்டிக்கிறார் என்று சொல்லப்பட்ட தேவ செய்தியால் நான் கவலைப்பட ஆரம்பித்தேன். என்னுடைய தீவிரமான செயல்களினால் எனது குடும்பமும் பாதிப்படையும் என்பதால் நான் அன்றே தீர்மானம் எடுத்துக் கொண்டேன். கர்த்தருக்கு பிரியமானவனாக நான் மாற வேண்டும் என தெளிவாக உறுதியாக தீர்மானம் எடுத்துக் கொண்டேன்.



எனினும் உடனடியாகவே என்னுடைய பணிகளைவிட்டு விலகி ஓடிவிட முடியாது. ஆகிலும் நான் என் நண்பர்களுக்கு அறிவித்தேன். தேவ கிருபையால் பிரதானமான பணிகளிலிருந்து நான் விடுவிக்கப்பட்டேன். கொலை செய்வது, தற்கொலை செய்வது எல்லாமே மிகப்பெரிய பாவமாகும். நிலத்தில்



சிந்தப்படும் இரத்தம் தன்னைப் படைத்தவரை நோக்கி அபயமிடுவதாக பைபிள் சொல்கிறது. இது உண்மையிலும் உண்மையே.

மரண தண்டனைகள் மூலமோ, படுகொலைகள் மூலமோ நிரந்தரமான விடுதலையையும் சமாதானத்தையும் எவருமே பெற்றுக்கொள்ளவோ ஏற்படுத்தவோ முடியாது என்பதே உண்மை.

இந்த மகத்தான மாற்றம் எனக்குள் ஒரு பெரிதான சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தர ஆரம்பித்தது. வேலை செய்யும் இடத்திலே வேலை நேரத்திலேயே ஒளித்து வைத்திருந்து 'பியர்' குடித்துக் கொண்டிருந்த காலம் மாறி அதே வேலைத்தளத்தில் ஓய்வான நேரங்களில் பைபிள் ஆதியாகமத்திலிருந்து வாசிக்க தொடங்கினேன்.

என்னுடைய இந்த மாற்றத்தை எனது நண்பர்கள் நம்பத்தயாரில்லாமலிருந்தார்கள் என்பது மனதுக்கு வருத்தமாயிருந்தது.

நான் கொழும்பிலிருந்து ஜுன் 1999 சென்னை சென்றேன். அதுவரை YFC கூடும் ஒன்றுகூடலில் சனிக்கிழமை தோறும் தவறாது சமுகமளித்து வந்தேன். சபைகள் பற்றி எனக்கு தெரியாது. நான் தொடர்ந்து எனது மார்க்கமாகிய கத்தோலிக்க தேவாலயத்திற்கே சென்று வழிபாடுகளை செய்து வந்தேன். எவருமே அது தவறு என எனக்கு சொல்லவில்லை.



சிலை மற்றும் சுரூபங்களை வழிபடுதலை நானே நிறுத்திக் கொண்டேன். திருப்பலிகள் வெறும் சடங்குகளாகவே என் கண்களுக்கு தெரிய ஆரம்பித்தது. இதனால் திருப்பலிகளில் பங்கேற்பதையும் மெல்ல மெல்ல நிறுத்தினேன்.

இப்போது நான்காவது பரிமாணம் நூலிலுள்ளதை வாசித்து கர்த்தர் எவ்வாறு பைபிளிலிருந்து இடைப்படுவார் அல்லது உணரவைப்பார் என்ற விந்தையை அறிந்து கொண்டேன். இதன்பின்னர் தான் என் வாழ்க்கையில் 28 வயதில் முதன் முதலாக தேவனை நோக்கி தனியாக அவர் பைபிள் மூலம் என்னுடன் பேச வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு முழங்காலில் நின்று ஜெபிக்க ஆரம்பித்தேன்.

யூன் 1999 முதல்வாரமளவில் கொழும்பிலுள்ள உருத்திரா மாவத்தை லேனிலுள்ள புத்தம் புதிய நவீன அடுக்குமாடி வீட்டிலிருந்து என் முதலாவது ஜெபத்தை ஏறெடுத்தேன்.

எனது நான்கு தங்கைகளின் திருமணமும் என் மீது எந்த நெருக்கடியுமில்லாமல் (சீதனம்) நடைபெற்று ஐரோப்பாவில் நலமுடன் வாழ்கிறார்கள்.

மேலும் எந்தவொரு உறவினரின் உதவியும் இல்லாமல் சுவிஸ் அரசின் தயவு மூலம்

நான் சுவிசுக்கு அழைத்து வரப்பட்டேன்.

இவைகளே எனது முதல் விண்ணப்பங்களாக ஜெபித்திருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்கிறவர் ஆமென்.

தாம் தேடின நபர் நான்தானா என்ற சந்தேகம் கைது செய்த பின்னர் Q பிரிவு அதிகாரிகளுக்கு ஏற்பட்டது. அவர்கள் என்னை பல தடவை எனது பெயர் மற்றும் விபரங்களை கேட்டு தடுமாறிக் கொண்டிருந்தனர். அப்பொழுது DSP அதிகாரி என்னிடம் நீ எப்படி மிகவும் அமைதியாகவும் நிதானமாகவும் இருக்கிறாய். உன்னிலே எந்தவொரு கலவரத்தையும் காண முடியவில்லையே என்று கேட்டார்.

எனது கைதுக்கு அவர்களுக்கு கிடைத்த பணப்பரிசை என் கண்முன்னாலேயே கட்டுக்கணக்கான பணத்தாள்களை கொட்டி எண்ணினார்கள். உனக்கு வேண்டுமானால் ஒரு கட்டு பணத்தை எடுத்துக் கொள் என்று அந்த அதிகாரிகள் என்னை கேலி பண்ணினார்கள்.

நான் கைது செய்யப்படுமுன் களுத்துறை சிறையில் இருப்பதாக சொப்பனம் கண்டிருந்தபடியினால் நான் சென்னையிலிருந்து கொழும்பு கடத்தப்படுவது பற்றி உணர்ந்திருந்தேன்.

ஆறு நாட்களின் பின்னர் கொழும்பிலிருந்து வந்த பொலிஸார் சென்னை விமான நிலையத்திலிருந்து பொறுப்பேற்று கொழும்பு கொண்டு வந்தனர்.

சென்னையில் ஓர் அமைதியான வாழ்வு, சந்தோஷமான எதிர்கால கனவுகளுடன் தங்கியிருந்த எனக்கு கொழும்பு கொண்டுவரப்பட்டது என்பது மிகவும் கசப்பான அனுபவமாகவே இருந்தது.

எனது உள்ளத்தில் ஓர் தேவ சமாதானம் ஆளுகை செய்து கொண்டு இருந்தது.

கைகளில் விலங்கிடப்பட்டவனாக பயங்கரவாத புலனாய்வுத் தலைமையகத்திற்கு கொண்டுவரப்பட்டேன்.

அடிக்கப்படும்படி சித்திரவதைகளுக்கு உட்படும்படி கர்த்தர் என்னை கைவிட்டு விட்டார். மிகக்கடுமையான விசாரணைகளுக்கு மத்தியில் நான் மிகவும் சமாதானமாயிருப்பது ASP அதிகாரிக்கு பெரிய கேள்வியாக இருந்தது. ஒரு மாதத்தின் பின்னரே கண்டுபிடித்தார். அதன் இரகசியம் நான் தினமும் வாசிக்கும் பைபிள். ஏறக்குறைய மூன்று மாதங்களாக என் கையிலிருந்த பைபிள் என்னிடமிருந்து வாங்கி எடுக்கப்பட்டிருந்தது.

பைபிள் கர்த்தருடைய வார்த்தைகள் நிறைந்த மிகப்பெரிய ஆசீர்வாதமான பொக்கிஷமாகும். மிகவும் ஆணித்தரமான நம்பிக்கையை கொடுக்க வல்லது இந்த பைபிள் மாத்திரமே. இதனை ஜெபத்துடன் வாசிக்கும் போது நாமிருக்கும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தேவவார்த்தைகள் நம்முடன் பேசும். அவை ஜீவனுள்ளவை. அந்த வார்த்தைகள் நம்மை நடாத்தும்.





# அபிஷேகமா? வல்லமையா?

பல சந்தர்ப்பங்களில் ஊழியர்கள் ஜெபிக்கும் போது விசுவாசிகள் நிற்க முடியாமல் கீழே விழுந்து விடுகின்றனர். சில வேளைகளில் நூற்றுக்கணக்கான விசுவாசிகளும் கூட அலையலையாய் கீழே விழுகின்றனர்.



இவர்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றம் தான் என்ன? ஊழியப் பாதையில் இது பிரகாசிக்க உண்மையாகவே உதவியதா? அபிஷேகம் பெற்றவர்கள் மாத்திரம் விழுகின்றனரா? அல்லது பிசாசு பிடித்தவர்கள், பாவிகள் மாத்திரம் விழுகின்றனரா?

செப்டம்பர் 1999ல் சென்னையில் தங்கியிருந்த போது சில நாட்கள் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தேன். தொடர்ந்து மாத்திரைகள் பாவித்தும் அது மோசமாகிக் கொண்டேயிருந்தது. அப்பொழுது திருவொற்றியூரிலிருந்து ஒரு பாஸ்டர் வந்து என்மீது கைகளை வைத்து ஜெபித்தார். ஒரு வல்லமை என்மீது கடந்து வந்தது. அந்த நொடியிலேயே நான் பரிபூரண குணம் பெற்றேன். அந்த வல்லமை சில

தினங்கள் என் சரீரத்தில் ஏதோ ஒரு தாக்கத்தை உண்டு பண்ணிக்கொண்டிருந்தது.

ஒரு கட்டிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமாயின் தேவனிடத்திலிருந்து ஒரு வல்லமை கடந்து வரவேண்டும். அந்த வல்லமை அபிஷேகம் உள்ளவர்களிடத்தில் தங்கியிருக்கும்.

அபிஷேகம் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கும் இடத்தில் காணப்படும்.

கர்த்தருடைய வார்த்தை கூட வல்லமையுள்ளதாகவே இருக்கும். அந்த வார்த்தை அபிஷேகம் பண்ணப்பட்டதாக புறப்பட்டால் மாத்திரமே வல்லமையாய் கிரியையை நடப்பிக்கும்.



தேவவார்த்தையாகிய இயேசுகிறிஸ்து கூட தனது ஊழியத்தை ஆரம்பிக்க முன்னர் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் செய்கிறார். அப்பொழுது வானத்திலே புறாவைப் போல பரிசுத்த ஆவியானவர் காணப்பட்டார். வார்த்தையாகிய இயேசு அற்புதங்களை செய்யத் தொடங்குகிறார்.

அபிஷேகம் என்பது ஒரு நியமனம் அல்லது அதிகாரம் என்பது என் விளக்கம்.

மோசே தேவனால் அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டபோது பெரிய அற்புதங்கள் நடைபெற்றன. தேவன் ஒருவனை அழைத்து குறிப்பிட்ட ஊழியங்களை வழங்கி அவற்றை நிறைவேற்றி முடிக்கவே அந்த அபிஷேகம் அவ்வூழியரின் தலைமீது வைக்கப்படுகின்றது.

ஆபிரகாமை, மோசேயை நேரடியாகவே அழைத்த தேவன் சவுல் ராஜா, தாவீது ராஜாவை தம் ஊழியக்காரனாகிய தீர்க்கதரிசி மூலமாக அழைக்கிறார். அபிஷேகம் பண்ணுகிறார்.

ஆபிரகாம், மோசே ஆகியோர் மீது எண்ணெயினாலோ, தைலத்தினாலோ கர்த்தர் அபிஷேகம் செய்யவில்லையே. ஆபிரகாமிடம் ஆசீர்வாதம் காணப்பட்டது. மோசேயிடம் அற்புதங்கள் செய்யும்படியான வல்லமை காணப்பட்டது.

ஆனால் ஆரோன், சவுல், தாவீது ஆகியோர் தைலத்தின்மூலம் அபிஷேகம் செய்யப்பட்டு நியமிக்கப்படுகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் காலத்தின் போது தான், பிதாவாகிய தேவனென்றும்



குமாரனாகிய கிறிஸ்து என்றும் பரிசுத்த ஆவியானவர் என்றும் மூன்று பேர் ஒரு தேவன் என்ற விடயங்கள் வெளிக்காண்பிக்கப்படுகின்றது.

பெந்தேகோஸ்தே நாளின் பின்னர் தான் பரிசுத்த ஆவியானவர் தேவ ஊழியக்காரரை நியமனத்தின் போது அபிஷேகம் பண்ணுகிறார் என்ற சத்தியம் விரிவாகக் காண்பிக்கப்படுகின்றது.

எனவே, அபிஷேகம் என்பது தேவனுடைய ஊழியத்திற்காக நியமிக்கப்படும்போது, அவரை பரிசுத்த ஆவியானவர் முத்தரை போடுதல் ஆகும்.

மறுபுறத்தில் பார்த்தால், யார் யாரெல்லாம் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளார்களோ அவர்களெல்லாரும் தேவனுடைய ஊழியத்திற்கென்று முத்திரை போடப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொருவருமே தாம் அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளதை முதலில் உணர்ந்து கொண்டால் உடனடியாகவே தமது ஊழியப்பாதை அல்லது அழைப்பு என்ன என்பதை ஜெபித்து அறிந்து கொள்ள நாட்டம் காணப்பட வேண்டும்.

ஒவ்வொருவரும் அபிஷேகம் பண்ணப்படலாமா? ஆம், நிச்சயம். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசிகளும் அபிஷேகம் பெற்று ஊழியம் செய்ய வேண்டிய தேவை காணப்படுகிறது. பூமி முழுவதுமாக இந்த பரிசுத்த அக்கினி கொண்டு போகப்பட வேண்டியதாயிருக்கிறதே.



ஆனால் அபிஷேகத்தை வைத்து வித்தை காட்டிக் கொண்டிருக்க முடியாது. மோசே பல அற்புதங்களை செய்தார். எனினும் தன் ஞானத்தை காட்டவல்லவே. கர்த்தர் இவ்வளவு இலட்சக்கணக்கான ஜனங்களையும் எகிப்திலிருந்து கூட்டிவரும்படி சொல்லி அனுப்பினார் என்பதை உறுதி செய்ய தேவ ஆலோசனையின் படியே எகிப்து ராஜா முன்பாக இவ்வளவு அற்புதங்களையும் செய்தார்.

இஸ்ரவேல் ஜனங்கள் தமக்கு ஒரு ராஜா வேண்டும் என்று சாமுவேல் தீர்க்கதரிசியிடம் கேட்டபோது தேவனுடைய தீர்க்கதரிசியாகிய

சாமுவேல் தன்னை ராஜாவாக்கிக் கொள்ளவில்லை. தேவ ஆலோசனையின் படி, தன் காணாமற்போன கழுதைகளை தேடிவந்த சவுல் என்பவனைஅபிஷேகம் பண்ணுகிறார். ஆனால் சவுல் ராஜாவோ தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீது ராஜா மீது தீராத எரிச்சல் உள்ளவனாய்க் காணப்படுகின்றான். சகல அதிகாரங்களும் செழிப்பும் செல்வமும் சவுல் ராஜாவிடம் காணப்பட்டாலும் தேவன் நம்பி செய்த அபிஷேகம் வல்லமையிழந்து, காணப்படாமல் போய் விடுகின்றது. ஒருநாள் வந்தது. நாடு நகரம் இழந்து, அநாதரவாக சவுல்ராஜா மரித்துப்போகிறான். எங்கே அந்த அபிஷேகம்? அது எப்போதோ எடுபட்டுப் போய்விட்டது.

ஆனால் சவுல்ராஜா மீது பழி தீர்க்காதபடி கர்த்தருக்கும் தேவ ஆலோசனைக்கும் காட்டுக்குள் காத்திருந்த தாவீது ராஜாவுக்கு நாடு நகரம் ராஜரீகம் என்பன வந்து சேர்ந்தன. 40 வருடங்கள் இஸ்ரவேல் தேசமனைத்தையும் அரசாண்டார்.

ஒருவர் மீது காணப்படும் தேவ அபிஷேகத்தை மற்றவர் கனம்பண்ண பழக வேண்டும். இறுதிவரையும் சவுல்ராஜாவை தாவீது ராஜா கனம் பண்ணினார். கர்த்தர் தாவீது ராஜாவை உயர்த்தினார்.



தாவீது ராஜாவின் மகன் சாலமோன் ஒரு தேவஆலயத்தை எருசலேமில் கட்டினான். அந்த தேவாலய பிரதிஷ்டை விழாவின் போதே ஜனங்கள் நிற்கக் கூடாமல் இருக்குமளவும் தேவ பிரசன்னம் காணப்பட்டது.

ஆனால் பெந்தேகோஸ்தே நாளின்போது இயேசுவைக் கொலை செய்த யூதருக்குப் பயந்து ஒளிந்திருந்து ஜெபம் பண்ணிக் கொண்டிருந்த 120 பேரின் மேலே பரிசுத்த ஆவியானவர் அக்னி நாக்கு வடிவமாக இறங்கி அபிஷேகம் செய்தார்.

என்ன நடந்தது? யாருக்கு பயப்பட்டு ஒளிந்திருந்தார்களோ அவர்கள் அதே வீதியில் இறங்கி இயேசு உயிரோடெழுந்து விட்டார் என்று பிரசங்கிக்கத் தொடங்கி விட்டனர்.



சாலோமோன் ஆலயத்தில் நடந்தது தேவபிரசன்னம். அதே எருசலேம் மேல்வீட்டறையில் நடந்தது அக்கினி அபிஷேகம். தேவபிரசன்னம் தேவஜனங்களுக்கு உரியதாய் காணப்படும். அபிஷேகம் புறஜாதியார் காணும்படி கிரியைகளை நடப்பிக்கும்.

ஆராதனைகளின் போது தேவபிரசன்னமும் காணப்படும். அபிஷேகமும் கடந்து வரும்.

தேவபிரசன்னத்தை உணர்ந்தவுடனேயே அநேகர் தாம் அபிஷேகத்துக்குள் கடந்து போவதாக நினைத்து விடுகின்றனர். எனவே தமக்கு பரிச்சயமான அந்நிய மொழிகளை பேச ஆரம்பித்து விடுகின்றனர்.

இசையால் கிளர்ச்சியை மாத்திரமே கொண்டுவரமுடியுமே தவிர பரிசுத்த அபிஷேகத்தையல்ல.

ஒருமனம், காத்திருப்பு, பரிசுத்தம் என்பவைகளே தேவபிரசன்னத்தைக் கொண்டுவரும். தேவன் தாம் பிரசன்னமாகியபின்னர், தாம் விரும்பியவாறு அபிஷேகம் செய்வார்.

தேவசபைகளில் தேவபிரசன்னம் காணப்படும்போது சபையார் நிற்ககூடாமல் (விழுவது) இருக்கும். யாவருக்கும் தேவ சமாதானம் காணப்படும்.

கர்த்தராகிய இயேசு அற்புதங்களை செய்தபோது கூட இது பிசாசினால் உண்டானதல்லவோ என பேசியர்களும் உண்டே.

எனவே தேவனில் மாத்திரம் விசுவாசம் வைத்து நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர் என்று எண்ணி, அவர் நம்மேல் வைத்த அபிஷேகம் வீணாய்ப் போய்விடாதபடி காத்து, அந்தப் பிரகாசமான காலம் வரை உறுதியாய் ஜெபத்திலே தரித்திருப்போம். தினமும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்போம்.

இயேசுவின் நாமத்தினாலே சாத்தானை வீழ்த்துவோம்.

**ETERNAL CALL**
Our Web Radio Programmes
On Viduthalai FM
**www.v1fm.com**
On Saturdays @ 09:30 - 10.00

**நித்திய அழைப்பு**
இணைய வானொலி நிகழ்ச்சி
விடுதலை FM ல்
**www.v1fm.com**
சனிக்கிழமை காலை 9.30 – 10.00



**தேவ செய்தி**
**சகோ.எறிக்.S.J**

Viduthalai Fm

**ஜெபம்**
**சகோதரி. ரெஜினா எறிக்**

# சிநேகிதன்

நண்பன் என்ற சொல்லைவிட சிநேகிதன் என்ற சொல்லே ஆழமானதாக கருதப்படும். சிநேகம் என்பது ஆழ்ந்த அன்பைக் குறிக்கிறது. நமது வாழ்வில் ஒரு சிநேகிதனோ, சிநேகிதியோ எந்த வயதிலாவது காணப்படும். பள்ளிப்பருவத்திலோ சரி, வேலைத்தளத்திலோ சரி ஒரு சிநேகம் காணப்படுவது இயல்பே. அது அடிப்படையிலே அவசியமானதும் கூட. ஒரு சிநேகத்துடன் உன்னை விசாரிக்கும் போது, மனம் நெகிழ்வடைந்து விடுமல்லவா. மனதில் பதுங்கிக் கிடக்கும் கனவுகள், கதைகள், காயங்கள், இனிய நினைவுகள் என பல வித விடயங்களையும் சிநேகம் மட்டும் தான் பகிர வழிவகுக்கின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து நானும் எனது நண்பன் ஒருவனும் 1990களில் கொழும்பு வந்து சேர்ந்தோம். வெவ்வேறு கால இடைவெளியில் வந்திருந்தாலும் எப்படியோ நமக்குள்ளே தேடிப்பிடித்து சந்தித்து கொண்டோம். நான் கொழும்பில் தங்கியிருந்தேன். எனது நண்பன் கண்டியில் தங்கியிருந்தான். அவன் கொழும்பு வரும் போதெல்லாம் நாம் இருவருமே சினிமா பார்ப்பது உணவகம் சென்று சுவையான உணவருந்துவது, நகர்வலம் வருவது என ஒரே கொண்டாட்டம் தான்.

ஒருநாள் குற்றப் புலனாய்வு பணியாக தலைமையகத்தினால் நான் தேடப்பட்டு பின்பு சரணடைந்தேன். அவர்களுக்கு தேவையானது ஒரே ஒரு தகவல் மட்டும் தான். எனது நண்பனைப் பற்றிய விபரங்கள் தேவைப்பட்டது. அவனை கைது செய்துவிட வேண்டும் என்ற பெரும் துடிப்பு அவர்களிடைய காணப்பட்டது. நானோ மௌனமாகி அடி, உதை, வதை என்பவைகளைப் பொருட்படுத்தாமல் என் நெஞ்சை பூட்டி வைத்துவிட்டேன். ஆறாம் மாடியில் ஐந்து வாரங்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டேன். இதனால் கவலையடைந்த எனது தந்தை என்னைப் பார்த்து விட்டு மரித்துப் போய்விட்டார். எனது தந்தையின் மரணத்தின் நிமித்தம் நான் ஆறுமாதங்களின் பின்னர் புதிய மகஸீன் சிறையிலிருந்து நீதிமன்றினால் பிணையில் விடுதலையானேன்.

மீண்டும் நண்பனை சந்தித்தேன். எமது சந்திப்புக்களை



கொஞ்சம் விழிப்போடு, இரகசியத் தன்மையோடு தொடர்ந்து கொண்டோம். இப்போது நண்பன் தேடப்படுகிறான். அவன் என்னிடம் கொழும்பு வந்து சேர அவனை பாதுகாத்து பத்திரமாக அனுப்பி வைத்தேன். சில காலங்களின் பின்னர் நண்பன் மீண்டுமாக வந்து சேர எமது சந்திப்புகள் வழமை போல தொடர்ந்தன.

மீண்டும் ஒரு சோதனை காலம். அவன் நிர்ப்பந்தமான சூழலில் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் என்ற நிலைமையில் என்னைப் பற்றிய விபரங்களை அழித்துவிட்டு சுற்றி வளைப்பின் போது தற்கொலை செய்து மடிந்து விடுகின்றான்.

சில காலத்தின் பின்னர் நான் கைதான போது அந்த போலீஸ் அதிகாரிகள் எனது நண்பனின் ஒளிப்படங்களை எனக்குக் காண்பித்தனர். அவனது மரணப்படுக்கை படம் பிடிக்கப்பட்டிருந்தது. இந்த ஒளிப்படங்களை பார்த்து நான் அழுத போதெல்லாம் அந்த அதிகாரிகள் நெஞ்சுகளும் இளகின.

என் வாழ்நாளில் மறக்க முடியாத மாபெரும் மரியாதைக்குரிய சிநேகம் வேறில்லை. இன்றும் நினைவுகள் வரும்போதெல்லாம் கண்கள் குளமாகிவிடுகின்றன.

ஆனால் பைபிள் இப்படி சொல்கிறது, “உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள், இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும் அவர்கள் பகையும் அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று, சூரியனுக்கு கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை” (பிரசங்கி 9:6)

எப்படிப்பட்ட சிநேகமாயிருந்தாலும் அது மரணத்துடன் மறைந்து போய்விடும் என்பதே பைபிள் சொல்கிறது.

ஆனால் மரித்த பின்பும் சிநேகிக்க கூடிய ஒரு சிநேகம் இருக்குமென்றால் அது எவ்வளவு பெரிதான சிலாக்கியம். அப்படியென்றால் மரிக்காத, அல்லது ஜீவிக்கிற ஒருவர்தான் இப்படி சிநேகிக்க முடியும்.

“நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்”–”நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்” (யோவான் 15:14,15) என இயேசு சொல்கிறார்.

இயேசுகிறிஸ்து மரித்தவர்களைக் கூட தனது ஊழியருக்கு முன்பாக உயிரோடெழுப்பினார். உடன் ஊழியர்கள் இயேசுவின் மேல் மிகுந்த பயபக்தியையும் மரியாதையையும் வைத்திருந்தனர். ஆனால் இயேசுவோ நீங்கள் என் ஊழியரும் நான் உங்கள் எஜமானரும் அல்லவே. “நான் உங்களை சிநேகிதர் என்றேன்” என்றார்.

ஏன் அப்படிச் சொன்னார் “ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்” (யோவான் 15:15) எந்தவொரு மூடிமறைப்புமில்லாமல் எல்லாவற்றையும் இயேசு சொல்கிறார். இது தான் உண்மையான

சிநேகம் மனுஷ சிநேகம் பகைமையாகும் போது சகல இரகசியங்களும் வெளியே கொண்டுவரப்படுகின்றன. ஆனால் இயேசுகிறிஸ்துவோ கர்த்தாதி கர்த்தர்., அவர் கடவுள். எனவே அவரை சிநேகிதனாக கொண்ட எல்லோருமே கொடுத்து வைத்தவர்கள்.

சிநேகம் கொண்டாட இயேசு உங்கள் இதயக் கதவினைத் தட்டி கொண்டேயிருக்கிறார். "இதோ, வாசற்படியிலே நின்று, தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" வெளி.4:20

மேலும், "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" (மத்.10:32) எனவே இயேசு இவ்வுலகிலும் சரி, நாம் மரித்தபின்பும் சரி எம்முடன் தொடர்ந்து சிநேகத்தைப் பேணக்கூடியவராக காணப்படுகிறார்.

எனவே, நாம் எமது வாழ்நாளில் நித்திய நண்பனாக கர்த்தராகிய இயேசுவை கண்டு கொண்டோமாகில் எமக்கு எப்போதுமே குறைவோ கவலையோ இருக்க மாட்டாது.

"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:1)

"அவர் (இயேசு) தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினால் அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்" (1யோவான் 3:16)

நாம் நித்திய காலமாய் சிநேகிக்கக் கூடிய உண்மையான அன்புள்ள சிநேகிதராகிய இயேசுவை நல்ல சிநேகிதராக ஏற்றுக்கொள்வோம். ஆமென்



குடும்பத்துடன் சகோ.எஜிங்
அவர்கள்





# நீ அனுப்பப்பட்டவனா?

மனுஷன் உருவாக்கப்பட்ட நாள்முதல் தேவனால் அவன் அனுப்பப்பட்டுக் கொண்டுதானிருக்கிறான். முதல் மனிதனாகிய ஆதாமிடம் "நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்து பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்" என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். பின்பு "தேவனாகிய கர்த்தர் மனுஷனை (ஆதாமை) ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து, அதை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்" (ஆதி.2:16)



நோவா என்கிற மனுஷனை தேவன் பெருமழை பெய்யுமுன்பாக ஜோடு, ஜோடாக மிருக ஜீவன்களையும் நோவா குடும்பத்தினரையும் பாதுகாக்குமாறு ஒரு பேழை (கப்பல்) செய்யுமாறு அழைக்கிறார். பெருமழை பெய்து பூமியை அழித்தது. பேழையிலிருந்தோரும் ஜீவராசிகளும் தப்பிக் கொண்டன. (ஆதி.3:16,17)

ஆபிரகாம் எனும் மனுஷனை, தேவனைத் தொழுது கொள்கிற ஜனங்கள் உருவாகும்படி தேவன் அழைக்கிறார். "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குப் போ" (ஆதி.12:1) ஆபிரகாம் அப்படியே போனபடியால் ஆசீர்வதிக்கப்பட்டான்.

ஆபிரகாமின் பேரனாகிய யாக்கோபு. அவருடைய புத்திரன்களில் ஒருவன் யோசேப்பு. கானான் தேசத்திலே கடும் பஞ்சம் ஏற்பட்ட போது எகிப்திலே தானியம் உண்டு என்று


கேள்விப்பட்டு யாக்கோபும் அவரது புத்திரர்களும் சென்றனர். யாக்கோபின் புத்திரரில் ஒருவன் யோசேப்பு தேவனால் முன்பே எகிப்திற்கு கொண்டுவரப்பட்டு ராஜாவின் அரண்மனையில் ஜனங்களை விசாரிக்கும் அதிகாரியாய் காணப்பட்டான். "ஜீவரட்சனை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார் (ஆதி.45:5) என்று தனது சகோதரர்களை கண்டபோது இப்படி யோசேப்பு சொன்னார்."

இந்த கானான் தேசத்திலிருந்து பஞ்சத்தின் நிமித்தம் புறப்பட்ட யாக்கோபின் குடும்பத்தினர் எழுபதுபேரும் எகிப்திலேயே தங்கிவிட்டனர். நானூற்று முப்பது வருஷம் தங்கிவிட்டனர். எகிப்திலே அடிமைகளாகவே ஆளப்பட்டார்கள். இவர்கள் கூக்குரலிட்டபோது தேவன் இரங்கினார். இந்த எகிப்திய ராஜாவிடமிருந்து விடுதலை செய்யவே மோசே என்கிறவரை தேவன் அழைக்கிறார்.

மோசேயினுடைய அழைப்பு மாபெரும் விடுதலையை அடிப்படையானதாக கொண்டதே. அடிமைத்தனத்திலிருந்த ஜனங்கள் கால்நடையாக எகிப்தை விட்டு கானான் தேசத்திற்கு புறப்பட்ட சமயம் ஆறுலட்சம் ஆண்கள் இருந்தனர் என்று வேதம் சொல்கிறது.

எத்தனை லட்சம் மக்கள்? இவர்களுக்கு தேவனுடைய பிரமாணங்களை, சட்டங்களை எப்படி கற்பிப்பது?

ஆம்! தேவன் பல தடவை மோசேயுடன் பேசி, ஜனங்களுக்கு கற்றுக்கொடுத்தார்.



இப்படி தேவனை அறிந்த ஜனங்களுக்கு முதலில் தேவனைப்பற்றி விளக்க வேண்டியிருந்தது. இதன்பின்னர் ஏராளமான தீர்க்கதரிசிகள், தேவஊழியர்கள், தேவபயமுள்ள ராஜாக்கள், நீதிமான்கள்,நியாயாதிபதிகள்.... என தேவன் பலரை தம்முடைய ஊழியங்களை செய்யும்படி அனுப்பினார்.

தேவனாகிய பிதாவானவரோடு ஒன்றாய் இருந்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுஷனாக பிறந்தார். அவர் பல்வேறு ஊர்களிலும் பரலோக ராஜ்ஜியத்தைக் குறித்து பிரசங்கித்தார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடன் இருந்த பன்னிருவரையுமம் ஊழியம் செய்யும்படி அனுப்பினார்.

ஏன் அனுப்பினார்?

"தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப்



பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்" (லூக்கா 9:2).

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அனுப்புமுன்பதாக அவர்களுக்கு சுகமளிக்கும் வரத்தைக் கொடுத்தபின்னரே அனுப்புகிறார்.

"சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து", அனுப்பினார் (லூக்கா 9:1)



எனவே தேவனால் அனுப்பப்படு முன்னதாகவே உனக்குள் தேவகிருபையினால், "நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே" (ரோமர் 12:6) என்ற வசனத்தினடிப்படையில் ஏதாவது தேவவரம் கிடைக்கப்பெற்றிருக்கும்.

தேவ ஊழியம் செய்ய நிச்சயமாகவே வல்லமை தேவை. அது உனது அழைப்பிற்கு ஏற்றவிதமாய் வேறுபடும்.

"ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன், போதிக்கிறதிலும், புத்தி சொல்கிறவன் புத்தி சொல்கிறதிலும் தரித்திருக்கக்கடவன்"–(ரோமர்.12:7,8)

இன்று நாம் எவ்வளவோ பெரிதான அற்புதங்களை செய்கிற ஊழியர்களை அறிந்துள்ளோம். வெற்றிகரமான தேவசபைகளைக் கட்டும் ஊழியரை அறிந்துள்ளோம்.

மற்றவர்கள் எல்லோருமே அப்படி தேவனால் அனுப்பப்படவில்லையே. எனினும் தேவன் ஒவ்வொருவரையும் அழைத்திருக்கிறார் என்பதுவும் அனுப்ப விரும்புகிறார் என்பதுவும் உண்மையே.

ஆனால் தனக்குரிய அழைப்பு என்ன என்பதை அறியாமலேயே தவறான ஊழிய பாதையை தெரிந்தெடுப்பது. பின்பு தள்ளாடுவது, தேவனையே குறைசொல்லி கசந்து கொள்வது மிகவும் வேதனைக்குரியதாகும். "உங்களில் எவனாகிலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாசஅளவின்படியே தெளிந்த எண்ணம் உள்ளவனாய் எண்ண வேண்டும்" (ரோமர்12:2)

எகிப்திலிருந்து புறப்பட்டபோது முதுகிற்குப் பின்னால் ஈட்டியோடும் வாள்களோடும், எதிரிகள், முன்னாலேயோ செங்கடல், மத்தியில் கூட இருந்த ஜனங்களின் முறுமுறுப்பு, இவைகளின் நடுவே நிற்கும் மோசே தேவன் அற்புதம் செய்வார் என்று காத்திருந்த போது, செங்கடல் இரண்டாகி புதிய பாதையை திறந்து கொடுத்தது.

என்னே விசுவாசம்! இப்படி விசுவாசமுள்ளவனாயிருந்தால் எண்ணி முடியாத ஆத்துமாக்களை உன்னால் கர்த்தருக்கென்று அறுவடை செய்ய முடியும்.

விசுவாசித்திரு! நீ அனுப்பப்பட்டவனே! காத்திரு!

ஆமென்.








கர்த்தருக்கு ஆராதனை செய்ய நாம் ஒன்று கூடும்போது உண்மையாகவே மகிழ்ச்சியோடு இருக்கின்றோமோ? தேவசபைகள் ஒன்று கூடும்போது தேவனை ஆராதித்து மகிமைப்படுத்தவே கூடுகின்றோம் என்கிற தெளிவான அறிவு காணப்பட வேண்டும். ஆனால் எல்லாரினாலும் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாமற்போய் விடுகின்றது.

இஸ்ரவேலர்கள் எகிப்திலே அடிமைகளாயிருந்தபோது தேவனை நோக்கி கூப்பிட்டார்கள். அது அவர் காதிலே கேட்கப்பட்டது. (யாத்.3:9) தேவனுடைய நோக்கம் விடுதலையின் பின்னர் இஸ்ரவேலர்கள் தம்மை ஆராதனை செய்ய வேண்டும் என்பதே.



ஒரு விடுதலையின் பின்னர் மகிழ்ச்சியோடு தேவனை ஆராதனை செய்ய முடியும். விலங்குகள் கூட திண்பண்டங்களை உண்டு விட்டு மனிதனுக்கு கட்டுப்பட்டடு வித்தைகள் செய்கின்றனவே. பசியோடு, பட்டினியோடு, சிறுமையோடு, தாழ்மையோடு, துன்பத்தோடு, துயரத்தோடு, கட்டுக்களோடு, சிறையிருப்போடு மகிழ்ச்சியாய் தேவனை ஆராதனை செய்ய முடியுமா?

ஏனோதானோவென்றோ, கட்டாயத்தின் பேரிலோ, ஈடுபாடு இல்லாமலோ கூடுகின்ற போது மகிழ்ச்சியாய் தேவனை ஆராதிக்க முடியாது.

மகிழ்ச்சியோடு தேவனை ஆராதிக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். ஆனால் சத்துருவாகிய பிசாசானவனோ தெளிவாக அதற்கெதிராக செயற்படுகின்றான்.

முதலாவது சபை கூடுதலை தடைபண்ணுகின்றான். இல்லையேல் மகிழ்ச்சியை எடுத்து போட்டுவிட்டு ஆலயம் செல்ல அனுமதிக்கின்றான். ஏறக்குறைய இரண்டுமே ஒன்றுதான்.

ஏனெனில் மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்வதே எமக்கு விடுவிக்கப்பட்ட அழைப்பாகும்.

நானூற்று முப்பது வருஷம் எகிப்திலே அடிமைகளாயிருந்து அற்புதமாக விடுவிக்கப்பட்டவர்கள், செங்கடலை இரண்டாகப் பிளந்து அதனூடாக தப்பிச் சென்றவர்கள், பின் தொடர்ந்து வந்த சத்துருக்கள் முற்று முழுதாக அதே செங்கடலுக்குள் மூழ்கடிக்கப்பட்டதை பார்த்தவர்கள் தான் இந்த இஸ்ரவேலர்கள். இப்போது மகிழ்ச்சியுடன்



தேவனுக்கு பாடல் பாடுகிறார்கள். (யாத்.15:1) ஆனால் சூழ்நிலைகள் மாறி குடிப்பதற்கு தண்ணீரில்லாமல் போனவுடன் முறுமுறுக்கிறார்கள்.

மீண்டும் அற்புதங்களை பெற்றவுடன் மகிழ்ச்சியோடு ஆராதனை செய்கிறார்கள்.

ஜனங்களுக்குள்ளே யார் பெரியவர்? மோசேயுடன் மாத்திரமா கர்த்தர் பேசுவார்? என்ற முரண்பாடுகள். இவற்றுடன் விபச்சாரம், களவு, இப்படி மோசமாக தேவ ஜனங்களை சாத்தான் வஞ்சித்து பெரிய வீழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தான்.

இவ்வளவு பிரச்சனைகளுக்கு மத்தியில் ஆராதனைகள் நடைபெற்றன தான். ஆனால் மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்தவர்கள் எத்தனை பேர்?

தேவ ஊழியனான ஸ்தேவான் என்பவர் இயேசுவை பிரசங்கித்து வந்தமையால் கைது செய்யப்பட்டார். அவரோ இன்னும் அதிகமாக இயேசுவை விளக்கினார். எனவே ஸ்தேவான் கல்லெறியப்பட்டு கொலை செய்யப்பட்டார். அந்த வேளையிலும் ஸ்தேவான் கர்த்தரை தொழுதுகொள்கிறார் என்பது முக்கியமானதாகும். (அப்.7:59)

சிறையிலே பவுலும் சீலாவும் தேவனைத் துதித்தார்கள். பேதுரு சிறையில் நிம்மதியுடன் நித்திரை செய்தார். தேவதூதர்கள் வந்து சிறையிருப்பை மாற்றினார்கள்.

காவலிலும் சிறையிருப்பிலும் தேவனை மகிழ்ச்சியோடே ஆராதனை செய்த இவர்கள் அல்லவா தேவனில் அன்பு கொண்டவர்கள்.

நெருக்கத்தின் மத்தியிலும் மகிழ்ச்சியோடே தேவனை ஆராதிப்பது சாத்தியமானதா? மேலே குறிப்பிடப்பட்ட தேவஊழியர் எப்படி மகிழ்ச்சியுடன் தேவனை ஆராதனை செய்தார்கள்?

மகிழ்ச்சியை காத்துக் கொள்ள நாம் கவனிக்க வேண்டிய விடயங்கள் தான் என்ன?

ஏதாவது காரியத்தைக் குறித்து கவலையுடன் இருக்கிறீர்களா? அதைக் குறித்து தேவனுக்கு தெரியப்படுத்தி விடுங்கள். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்" (பிலி4:6) அப்படி செய்வதினால் என்ன நடக்கிறது "அப்பொழுது எல்லாப்புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொள்ளும்." (பிலி.4:7)

கர்த்தரில் தெளிவான நம்பிக்கை இருக்க வேண்டும். "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்" (ரோமர்.12:12) நீங்கள் கர்த்தரிடத்தில் உங்கள் விண்ணப்பத்தை தெரியப்படுத்தி ஜெபித்து விட்டீர்களா? இப்போது முழு நம்பிக்கையோடே சந்தோஷமாயிருங்கள்.

பாவத்தோடே எப்படி விடுதலையில்லாமல் ஆலயத்திற்கு சென்று தேவனை ஆராதிப்பது என்ற துக்கம் ஒருவேளை இருக்கலாம். "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன். (லூக்கா 5:32) என்று இயேசு மிகவும் தெளிவாக சொல்கிறார். தவறாமல் தேவனைத் தேட தேட பாவம் விலகிப் போகும்".

நான் பைபிள் படிப்பிற்கு தவறாமல் இரண்டு மூன்று வாரம் சென்று வந்தேன். புகைபிடித்தல், மதுபானம், அருந்துதல், சினிமா பார்த்தல் மற்றும் விக்கிரக ஆராதனை செய்தல் என்பவை தானாகவே என்னை விட்டு தூரமாகின. இவைகளை செய்வது மிகவும் அருவருப்பாயிருந்தது.

"தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்." (1 யோவான்.4:16)

எனவே தேவாலயத்திற்குள் காலடி எடுத்து வைத்தவுடன் உன்னை நேசிக்கிற தேவன் இருக்கிறார் என்பதை முதலாவது நினைத்துக் கொள்ள வேண்டும். அந்த தேவ அன்பை உள்ளத்தில் நினைக்கும் போது தேவன் பேரில் உறுதியான பற்று ஏற்படும்.

"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்"(1பேதுரு5:7)

என்ன? இவ்வளவு தெளிவு இருந்தால் போதும் உங்களால் மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்ய முடியும். ஆமென்


Viduthalai Fm
Reaching the Nation with the Good news.

*அகிலமெங்கும்*
*அசைந்தாடும் தென்றலில் தேடி வரும்*
*கர்த்தரின் குரல்! விடுதலை FM!!*
*மகிழ்ந்து களிகூரச் செய்யும்*
*இனிய பாடல்கள்!*
*விசுவாசத்தை கட்டிபெழுப்பும்*
*தேவ செய்திகள்!!*
*வல்லமையான ஜெபங்கள்!!!*
*இவை அனைத்தையும் சுமந்து*
*நாடி வருகின்றது விடுதலை FM*
*கேட்க தவறாதீர்கள்!!*
**www.v1fm.com**






# உன்னத சாட்சி

**இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒருவனுக்காக அவர் எப்படி வழக்காடுவார் என்பது பற்றி சாட்சி!!**


– சகோ.நிராஜ் டேவிட்
யுரோப்பியன் பிரஸ் பெடரேஷன் பத்திரிக்கையாளர்


1999இல் கொழும்பு பொலிஸாரினால் தேடப்பட்டு இந்தியாவில் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்ட ஒரு ஈழத்தமிழர் பற்றிய செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

யேசுதாஸன் எறிக் சௌந்தரநாயகம் எனும் அந்த ஈழத்தமிழர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட காலகட்டத்தில் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டார்.

தனது குடும்ப வைபவம் ஒன்றில் கலந்து கொள்ளவென சென்னை சென்றிருந்த சமயம், கொழும்பில் இடம்பெற்ற சம்பவமொன்றின் அடிப்படையில் கொழும்பு பயங்கரவாத புலனாய்வு பணியக (TID) பொலிஸாரினால் தேடப்பட்டு சென்னை Q பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டார்.

கைது இடம்பெற்ற வேளையில் இவரிடமிருந்து ஒரு பைபிள் தந்தை பெர்க்மான்ஸின் ஒரு கசட், பென்னி ஹின்னின் "அபிஷேகம் எனும் ஆவிக்குரிய நூல் என்பவற்றை கண்டெடுத்திருந்தனர். Q பிரிவு பொலிஸார் தாம் வேறொருவரை தவறுதலாக கைது செய்துவிட்டோமோ என தடுமாறி அங்கலாய்த்தனர். காரணம் சகோதரன் எறிக் மிகவும் அமைதியாக காணப்பட்டதே. ஏனெனில் இனி இயேசுவுக்காக வாழ்வதென்று தீர்மானித்த பின்னரேயே இது நடைபெற்றது. கிறிஸ்துவுக்குள் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் இருந்தார். சகோதரன் எறிக் இரட்சிக்கப்பட்டு விட்டார் என்று சொல்வதை பொலிஸாரும் Q பிரிவு பொலிஸாரும் நம்ப தயாராக இருக்கவில்லை.

சகோதரன் எறிக் சுமார் ஒரு வாரத்தில் சென்னையிலிருந்து கொழும்பு கொண்டுவரப்பட்டார்.

இவருக்காக குரல் கொடுத்த பிரபல சட்டத்தரணியும் படுகொலை செய்யப்பட்டார். இதனால் எந்த சட்டத்தரணியும் இவருக்காக உயர்நீதிமன்றத்தில் ஆஜராக தயாராகவில்லை, துணியவில்லை.

கர்த்தர் ஒருவரே தனக்காக வழக்காடுவார் என்பதில் சகோதரன் எறிக் தெளிவாக இருந்தார். கடுமையான சித்திரவதைகளின் போதும் சகோதரன் எறிக் எப்படி அமைதியாக இருக்கிறார் என்பதை இரண்டு மாதங்களின் பின்னரே எ,எஸ்,பி ஒருவர் கண்டுபிடித்தார். எந்த வேளையிலும் பைபிள் வாசித்ததே அந்த அமைதிக்குக் காரணம். உடனேயே பைபிள் கையிலிருந்து பறிக்கப்பட்டு மூன்று மாதங்கள் பூட்டி வைத்துவிட்டார்கள்.

தினமும் காலையில் 7 மணி முதல் 8 மணி வரை விலங்குகளை திறந்து முழங்காலில் நின்று ஜெபிக்க காவலாளிகள் உறுதுணை புரிந்தார்கள்.

6வது மாடி, வெலிக்கடை மற்றும் களுத்துறை சிறை என தடுத்து வைக்கப்பட்டிருந்த சகோதரன் எறிக், அங்கெல்லாம் தேவசபைகளை நிறுவி ஜெபித்து வந்தார். பின்னர் பரி.ஆவியானவரின் வழிகாட்டலில் தேவ செய்திகளை கொடுத்தார். சிறைச்சாலையிலேயே ஆத்தும ஆதாயம் மற்றும் ஆவிக்குரிய அனுபவங்களை பெற்றுக் கொண்டார். இவருக்கெதிரான குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை உயர்நீதி மன்று ஏற்றுக் கொண்டதினால் 2003 நவ 14ம் தேதி மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கப்படலாம் என சிறைச்சாலை அத்தியட்சகர் தமது அலுவலகத்திற்கு அழைத்து நேரில் தெரிவித்திருந்தார். ஆனாலும் பரி.ஆவியானவர் இவரது பிறந்த தினமான 2003 அக்டோபர் 8ம் தேதியில் நாகூம் 1:12,13 வசனங்களின் படி விடுதலையாக்குவேன் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்.

இதன்படி 2003 நவம்பர் 10ம் தேதி இரகசியமாக கொண்டு வந்து கொழும்பு உயர்நீதிமன்றில் விடுதலை செய்தனர். விடுதலையைத் தொடர்ந்து சுவிஸ் தூதராலயம் வீசாவை கொடுத்தது.

இதுவரை ஜெர்மனி, டென்மார்க், சுவிஸ், ஹொலண்ட், கனடா மற்றும் இத்தாலி ஆகிய தேசங்களில் தனது சாட்சியை பகிர்ந்துள்ளார். இரவது சாட்சி பலரையும் தொட்டுவருகின்றது. மேலும் இவரின் வல்லமையான பிரசங்கம் சபைகளில் ஒரு எழுப்புதலைத் தூண்டும் வகையில் பிரயோஜனமுள்ளதாக காணப்படுகின்றது. கர்த்தர் 2001ம் ஆண்டில் சொன்னபடி JESUS ETERNAL HOYLLIFE MISSIONஎன்கிற சுவிஷேச ஊழியத்தை செய்து வருகின்றார்.

கர்த்தராகிய இயேசுவுக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக."




# தாமதமானாலும் தரிசனம் நிறைவேறும்

கடந்த மார்கழி 2012ம் ஆண்டு BRO.ERIC அவர்களை சந்திக்க கர்த்தர் தாமே கிருபை செய்தார். அவர் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்டது முதல் கைதியாக இலங்கை கொண்டுவரப்பட்டது, சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டது வரை அந்த காலக்கட்டங்களிலே (1999) இலங்கை இந்தியாவில் ஊடகங்களில் பிரதான செய்திகளாக உலா வந்தது எனக்கு நன்றாக ஞாபகம் உள்ளது.



ஆனால் அவர் இரட்சிக்கப்பட்டதுடன் சிறைச்சாலையிலே (வெலிக்கடை, களுந்துறை) ஊழியம் செய்தது குறித்து பின்னர்தான் அறிந்து கொண்டேன். 1999ம் ஆண்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிறைச்சாலையிலே அவருக்கு கொடுத்த தரிசனத்தின்படி 14 ஆண்டுகள் கழித்து 2013ல் பிலிப்பியர் 1:5-6 இன்படி நிறைவேறி வருகிறதை நினைத்து என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

இயேசு கிறிஸ்துவின் வருகையின் நாட்கள் சமீபமாயிக்கிறபடியால் ராஜ்யத்தினுடைய சுவிசேஷம் பூமியிலுள்ள சகல ஜனங்களுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்பட (மத் 24:14) வேண்டும். ஆகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவரையும் இவரது குடும்பத்தையும் பூமியிலே சாட்சியாக கொண்டு செய்து வரும் JEH MISSION ஊழியத்தையும் வர்த்திக்கப்பண்ணுவாராக அற்மாக என்னப்படும் ஒவ்வொரு சகோதரனும், சகோதரியும் கிறிஸ்துவுக்காக தான் எண்ணத்தை செய்யலாம் என்ற வாஞ்சையையும், விருப்பத்தையும் கொடுக்கும் விதமாக இவரது இந்நூல் அமையும் என விசுவாசிக்கிறேன்.

1 கொரி 9:19 படி அதிக ஜனங்களை இயேசுவுக்குள் ஆதாயப்படுத்திக்கொள்ளவும், நீதிமொழிகள் 11:30 இன்படி ஞானமுள்ளவன் ஆத்துமாக்களை ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவான் என்ற வசனத்தின்படியும் கர்த்தர்தாமே இவருக்கு கொடுத்த ஞானத்திற்காகவும் தரிசனத்திற்காகவும் ஆண்டவராகிய இயேசுவுக்கு நன்றி செலுத்துகிறேன்.

கிறிஸ்துவுக்குள் தாழ்மையுடன்

BRO.ஜொலி
EL BETHEL GOSPEL MINISTRIES, PALERMO, ITALY
T/P : 00393208370438



# எழும்பு! எழும்பு!! பலர்மோவே!!!

2012 டிசம்பர் 20ம் தேதியளவில் என் உள்ளத்தில் ஆவியானவர் ஒரு கட்டளையிட்டார். அதுவென்னவெனில், கிறிஸ்மஸ் நிகழ்ச்சிக்கு ஒரு தேவசெய்தியை ஆயத்தப்படுத்து என்பதாகும். அதற்கான தலைப்பையும் தந்தார்.

அதாவது, இயேசுகிறிஸ்து பிறந்த போது ஞானிகள் தேடிவந்து தொழுது, பொன், தூபம், வெள்ளைப் போளம் என்பவற்றை பரிசாகக் கொடுத்தனர்.

ஆனால் மீண்டும் நியாயத்தீர்ப்பு செய்ய பூமிக்கு வரப்போகும் இயேசு ஒரு ராஜாவாக திரும்ப வருவார். அவரிடம் நாம் பொன், தூபம், வெள்ளைப்போளம் போன்றவற்றை பரிசாகக் கொடுத்து சமாளிக்க முடியாது. அவரிடம் நாம் தெளிவான செயல்கள் செய்ததன் மூலமே பதில் கொடுக்க முடியும்.

“பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன் என் தாகத்தை தீர்த்தீர்கள். அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள். வஸ்திரமில்லாதிருந்தேன் எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள். வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள். காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்” இயேசு ராஜா (மத்.25:15,16).

இந்த தேவ செய்தியை ஆயத்தப்படுத்தின போது பாஸ்டர் எஸ்.சுபேஸ்கரன் (Christ’s Glorious Church of Truth) தொலைபேசியில் தொடர்பு

பலர்மோவே பட்டணத்தில்
நம் சகோதரர்



கொண்டு தமது சபையின் கிறிஸ்மஸ் நிகழ்ச்சியில் தேவசெய்தியை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இப்படியாக தேவசெய்தியைக் கொடுத்த போது தான் இத்தாலியாலிருந்து வந்திருந்த சகோ.அன்ரனி ஜொலி என்பவர் அறிமுகமானார். திடீரென தாம் இந்த கிறிஸ்மஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டதாக தெரிவித்தார்.

2013 மே மாதம் நடுப்பகுதியில் ஒரு இரவு கர்த்தர் என்னுடனும் அதே நேரம் என் மனைவி ரெஜினாவுடனும் மூன்று நாள் உபவாசிக்கும்படி அறிவுறுத்தினார்.

மறுநாள் நாம் உபவாசிக்க தொடங்கிய போது சகோ.ஏ.ஜொலி தொலைபேசியில் தொடர்பு கொண்டு இத்தாலியில் மூன்று நாட்கள் கூட்டம் நடாத்த வரும் படி கேட்டுக்கொண்டார். இது கர்த்தரின் செயல் என்பதை எவ்வித சந்தேகமுமின்றி உணர்ந்து, உடனடியாகவே சம்மதித்தோம்.

நாம் எமது சொந்த செலவிலேயே சுவிஸிலிருந்து இத்தாலிக்கு வருவதாக உடனேயே தெரிவித்து விட்டேன். ஆனால் எமது கையில் பணம் இருக்கவில்லை. நானும் மனைவியும் இரண்டு குழந்தைகளுக்குமாக விமான சீட்டு வாங்க வேண்டும். ஜெபம்,.... ஜெபம். கர்த்தர் வாய்க்கப்பண்ணினார்.

மருத்துவ காப்புறுதி நிறுவனம் மேலதிகமாக நாம் செலுத்திவிட்டதாக கூறி 960 பிராங்குகளை எமது வங்கியிலிட்டது. விமான பயணச் சீட்டு வாங்க 940 பிராங்கள் தேவைப்பட்டது.

ஆம்! கர்த்தர் எமது தேவையை சந்தித்தார். கர்த்தருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக.

பலர்மோ, இத்தாலி விமான நிலையத்தில் சகோ.ஏ.ஜொலி மற்றும் சபையார் எங்களை வரவேற்றனர்.

நானும் மனைவி ரெஜீனாவும் சுவிசேஷக் கூட்டம் நடத்திய மூன்று நாட்களும் பூரணமாக உபவாசித்து ஜெபித்தோம். கர்த்தர் மூன்று நாள் கூட்டங்களையும் தமது வார்த்தைகளை அனுப்பி ஆசீர்வதித்தார். புதியவர்களும் சபையோரும் விசுவாசத்தில் கட்டியெழுப்பப்பட்டனர்.

இதேநேரம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனது மனைவிக்கு சொப்பனத்தில் உங்கள் உபவாச ஜெபத்தின்படி இந்த பலர்மோ பட்டணத்தை ஆசீர்வதிப்பேன் என்று வாக்குப்பண்ணினார்.

அமைதியான சுபாவமுடையவரும் தெளிவான சத்தியத்தின் படி தமது ஊழியத்தை செய்து வருகிறவருமான பாஸ்டர் சசிகரன் அவர்கள் எமது மூன்று நாள் கூட்டங்களும் தமது சபைக்கு பக்தி விருத்தியையும், ஆசீர்வாதத்தையும், புதிய எழுப்புதலையும் தந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

மனநிறைவோடு அவர்கள் தந்த காணிக்கையே இந்த சுவிசேஷ பிரதி வெளிவர உதவியாயிருந்தது. கர்த்தருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக.